செய்தி வெளியீடு எண்: 458 நாள்: 31.07.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (31.7.2019) தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கீழ் செயல்படும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையில் கோயம்புத்தூர், தூத்துக்குடி, நாமக்கல், நீலகிரி, திருவள்ளூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 9 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மற்றும் வட்ட மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் நவீன மருத்துவக் கருவிகள் நிறுவுதல், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவித்தல், எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அவர்கள் வாழும் பகுதிகளிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், மருத்துவத் துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை சார்பில், கோயம்புத்தூர் மாவட்டம் – அரிசிபாளையம் மற்றும் தாளியூர், தூத்துக்குடி மாவட்டம் – ஒட்டநத்தம், நாமக்கல் மாவட்டம் – பவர்காடு, நீலகிரி மாவட்டம் – கேத்தி, திருவள்ளூர் மாவட்டம் – நேமம் ஆகிய இடங்களில் 7 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்;

நாமக்கல் மாவட்டம் – தேனூர்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் – மேலஉளூர் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – புதூர் உத்தமனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவு கட்டடம், விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடம்;

என மொத்தம் 9 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தேசிய தர உறுதித் திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சுகாதார சேவைகள், சுகாதார குறியீடு, முறையான பராமரிப்பு மற்றும் அங்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து நோயாளிகளின் கருத்துக்கள் ஆகியவற்றை தேசிய தர குழு நிபுணர்கள் ஆய்வு செய்து, தேர்ந்தெடுக்கப்படும் அரசு மருத்துவமனைகளுக்கு, மத்திய அரசு பரிசுத் தொகையும், தேசிய தரச் சான்றிதழும் வழங்கி பாராட்டி வருகிறது. இந்த பரிசுத் தொகை தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

அந்த வகையில், மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் தேசிய தர உறுதித் திட்டத்தில் 2018–19ஆம் ஆண்டிற்கு கோயம்புத்தூர் மாவட்டம்– பொள்ளாச்சி, தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம் – அறந்தாங்கி, இராமநாதபுரம், பெரம்பலூர், விருதுநகர் ஆகிய 6 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய தரச் சான்றிதழுடன் 2 கோடியே 6 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது.

மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் வழங்கப்பட்ட தேசிய தரச் சான்றிதழ்களை, இராமநாதபுரம், பெரம்பலூர், கோயம்புத்தூர், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குநர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். அத்துடன், தேசிய தரச் சான்றிதழுடன் வழங்கப்பட்ட பரிசுத் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று இராமநாதபுரம், பெரம்பலூர், கோயம்புத்தூர், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குநர்களுக்கு வழங்கினார்கள்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், இருதயம், வளைபாதம் மற்றும் காதுவால் நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை செய்து கொண்ட 18 குழந்தைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்கள். அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், காதுவால் நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை செய்து

கொண்ட குழந்தைகளுக்கு, காது உள்வைப்பு கருவிக்கான உதிரி பாகங்களை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை செயலாளர் டாக்டர் (திருமதி) பீலா ராஜேஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் உமாநாத், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் திட்ட இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் கே. செந்தில்ராஜ், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர். எட்வின் ஜோ, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (பொறுப்பு) டாக்டர். டி. எஸ். ஸ்வாதி ரத்னாவதி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**